
# தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!



நாள் : 02.10.2026 - (வெள்ளிக்கிழமை)

| நேரம் | ஒன்றிய/நகர/பேரூர்க் கழகங்கள் | இடம் |
|---|---|---|
| காலை 10.30 | தாராபுரம் நகரம் | தாராபுரம் அமராவதி சிலையிலிருந்து பொள்ளாச்சி சாலை - பெரியகடை வீதி வழியாக 'ரோடு ஷோ' |
| மாலை 5.00 | தாராபுரம் நகரம் | உடுமலை சாலை மல்லி ரிசார்ட் அருகில் பொதுக்கூட்டம் |

தேர்தல் பணிக்குழு
101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி



"தாங்கள் விரும்பிய வேறு கல்லூரியில் இடம் கிடைத்து மாணவர்கள் சேர நினைத்தால், முதலில் சேர்ந்த கல்லூரிக்குச் செலுத்திய கல்விக் கட்டணமும், மாற்றுச் சான்றிதழும் (TC) காலதாமதமின்றி வழங்கப்பட வேண்டும்" எனக் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவால் பயனடைந்த திருச்சியைச் சேர்ந்த மாணவி ராஜேஸ்வரி நேற்று (26.09.2026) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து நன்றி தெரிவித்தார். கோவில் திருமாளம் தட்சிணாமூர்த்தி அவர்கள் மற்றும் மாணவியின் பெற்றோர் உடன் உள்ளார்கள்.

### பாலியல் வன்கொடுமையால் பாதிப்பிற்குள்ளான

## 10ஆம் வகுப்பு சிறுமிக்கு நீதி வேண்டும்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



சென்னை, செப்.27-

பாலியல் வன்கொடுமையால் பாதிப்பிற்குள்ளான 10 ஆம் வகுப்பு மாணவிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

வண்டலூர் அருகே பள்ளி வளாகத்திற்குள்ளேயே 10ஆம் வகுப்பு மாணவிக்கு மயக்க மருந்து கொடுத்து, மூச்சடைக்கச் செய்து பாலியல் வன்கொடுமை செய்ததாக வெளியாகியுள்ள செய்தி பெரும் அதிர்ச்சி அளிக்கிறது.

இன்று முதலமைச்சர் விஜய் அவர்கள் மதுராந்தகம் வருகிறார் என்பதற்காக, இந்தச் சம்பவத்தை பொய் செய்தி எனக் கூறி, மூடி மறைக்க காவல் துறை முயற்சிப்பதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றம்சாட்டும் அளவுக்கு கேடுகெட்ட ஆட்சியை, இந்த த.வெ.க. அரசு நடத்திக் கொண்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைப்பதை விட, முதலமைச்சரின் வருகைக்கு களங்கம் ஏற்படக்கூடாது என்பது தான் காவல்துறையின் முன்னுரிமை என்றால், உண்மையில் இது யாருக்கான ஆட்சி? எப்படி அந்தச் சிறுமிக்கு நீதி கிடைக்கும்?

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துப் பெற்ற

## தட்டாஞ்சாவடி தொகுதி வேட்பாளர் சேதுசெல்வத்தின் வெற்றி உறுதி!

### முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி நம்பிக்கை!



புதுச்சேரி, செப். 27-

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் சேது செல்வத்தை ஆதரித்து தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட கொட்டுப்பாளையம், புதுப்பேட், சுப்பையா நகர், குண்டு பாளையம் பகுதிகளில் தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, மாநில அமைப்பாளர் இரா.சிவா ஆகியோர் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் வீடு, வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

தொடர்ந்து நேற்று முன்தினம் காலை கவுண்டம்பாளையம் பகுதியிலும் மாலையில் பாக்குமுடையான்பட்டு, கம்பளி சாமி மடம், ஆனந்தபுரம் பகுதிகளில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் க. பொன்முடி, திமுக மாநில அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி ஆகியோர் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்தனர்.

அப்போது வாக்காளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தட்டாஞ்சாவடி தொகுதியில் யார் ஜெயித்தால் தொகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை உணர்ந்தவர்கள். இப்பகுதி மக்களின் எழுச்சி மிகு வரவேற்பை பார்த்தாலே தெரிகிறது நிச்சயம் தி.மு.க. வேட்பாளருக்கு முழு ஆதரவு அளிப்பார்கள் என்று. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின், இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆசியுடன் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சேதுசெல்வத்தின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது. தி.மு.க. வென்றால் தான் புதுச்சேரியில் மாற்றம் ஏற்படும். இவ்வாறு பேசினார்.

வாக்கு சேகரிப்பின் போது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி. அனிபால் கென்னடி, விழுப்புரம் தெற்கு மாவட்ட அவைத்தலைவர் ம. ஜெயச்சந்திரன், புதுச்சேரி மாநில மீனவர் அணி அமைப்பாளர் ந, கோதண்டபாணி உள்ளிட்ட பலரும் உடனிருந்து வாக்குகள் சேகரித்தனர்.




மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட 45 வாக்குச்சாவடிகளுக்கான மகளிர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகள் வழங்கினார். உடன் முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன், மாவட்ட செயலாளர் சுந்தர், வந்தவாசி சட்மன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்கர், ஒன்றிய செயலாளர் கண்ணன் ஆகியோர் இருந்தனர்.

### வி.ஐ.டி. பல்கலைக் கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் எழுதிய

## "சாதனைச் சகோதரர்கள் நாவலர் - செழியன் 'நூல்'!

### கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டார்!



வேலூர், செப்.26-

வி.ஐ.டி பல்கலைக்கழகம் மற்றும் நாவலர் செழியன் அறக்கட்டளை இணைந்து நடத்திய நூல் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது.

வி.ஐ.டி பல்கலைக்கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் அவர்கள் எழுதிய "சாதனைச் சகோதரர்கள் நாவலர் - செழியன்" என்ற நூலை சிறப்பு அழைப்பாளராக கழகப் பொதுச்செயலாளர், துரை முருகன் அவர்கள் கலந்து கொண்டு வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இரா.சபாபதி மோகன்

வி.ஐ.டி பல்கலைக்கழக துணைத் தலைவர் ஜி.வி.சங்கர்,

வேலூர் மாநகர மேயர் திருமதி. சுஜாதா,

கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஜெம் வீரமணி விவகாரத்தில் தி.மு.க.வுக்கு எந்தத் தொடர்பும் இல்லை!

## இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது!

### காட்பாடியில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

வேலூர், செப்.27-

இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என காட்பாடியில் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் கூறினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி காந்திநகரில் தி.மு.க., பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

பா.ஜ.க.,வை எதிர்த்ததால் மு.க.ஸ்டாலின், பினராயி விஜயன், மம்தா ஆகியோர் தோற்கடிக்கப்பட்டனர் என்று எஸ்.ஐ.ஆர் விவகாரம் தொடர்பாக கரப்பான் பூச்சி ஜனதா கட்சித் தலைவர் அபிஜித் குற்றச்சாட்டு வைத்திருக்கிறார்.

இந்த விவகாரம் தற்போது விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. இதில் தலைமை தேர்தல் ஆணையரை மாற்ற வேண்டும். மம்தா பானர்ஜி, பிரனாயி விஜயன், மு.க.ஸ்டாலின் ஆகிய தலைவர்கள் எந்த ஊரிலும் தோற்பதற்கு வாய்ப்பே கிடையாது.

எங்களைப் போன்றவர்கள் எல்லாம் குறி வைத்து தோற்கடிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் தேர்தல் கமிஷனரை வீட்டுக்கு அனுப்புறதுதான் முறை.

எங்கள் ஆட்சியில் மின்சாரம் சரியாக உள்ளது என்றுதான் ஆளும் கட்சி அமைச்சர்கள் சொல்வார்கள். சாதாரண குடும்பங்களில் மின்சாரம் எவ்வளவு துண்டிக்கப்படுகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

ஜெம் வீரமணி வழக்கில் தி.மு.க.,வை எப்படி குறை சொல்ல முடியும்? ஜெம் வீரமணிக்கு தி.மு.க., ஒன்றும் வக்காலத்து வாங்கவில்லையே.. யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். சட்டம் தன் கடமையை செய்திருக்கிறது. யாராயிருந்தாலும் தண்டிக்கபட வேண்டியவர்கள். ஜெம் வீரமணி விவகாரத்தில் தி.மு.க.,வுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று எல்லோரும் சொல்லி விட்டோம்.

கரப்பான்பூச்சி ஜனதா கட்சி, தேர்தல் ஆணையர் பதவி விலக வேண்டும் என்று சொல்லியதை அடுத்து ராகுல் காந்தி அதையே முன்னெடுத்து இருக்கிறாரே என்று கேட்கிறீர்கள். கட்சிக்கு அப்பாற்பட்ட ஒன்று இது. இதை எல்லோரும் ஒன்று சேர்ந்து தான் செய்ய வேண்டும். கரப்பான் பூச்சி மட்டுமே செய்ய வேண்டும் என்று அல்ல. எல்லா பூச்சியும் சேர்ந்துதான் செய்யணும்.

எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் ஆதியிலேயே இது சரியில்லை என்று தி.மு.க., சொல்லிக் கொண்டுதான் இருக்கிறது. இதுகுறித்து தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் ஆயிரம் முறை பேசி இருக்கிறார். எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் குறைபாடு உண்டு.

இடைத்தேர்தலில் 2 தொகுதிகளிலும் தி.மு.க.,வின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.